பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

இஃது

நூதனமாக அனந்த நன்மாராயங் களிக்கிறும்

தவ்லதே தாரைன்

(என்னும்)

இருலோக சம்பத்து.

———:o:———

இரண்டாம் பாகம்

திருநபீ யுகப்பும், தீனோர்கள் மதிப்பும்.

இதனை

வாலாஜா தாலூக்கா மேல்விஷாரம்

கடைக்கார அப்துல்கனீ சாஹிபவர்கள் குமாரர்

(அஹ்ஸன்) க. முஹம்மது இப்றுஹீம்சாஹிபவர்களால்

கோர்வைச் செய்து

அனந்தம் உலமாக்களால் பரிசோதித்து

கீழ்விஷாரம் வெள்ளிக்கண்ணு மர்ஹூம் ஆலிஜனுப்

அப்துல் அஜீஸ் சாஹிபவர்கள் புத்திரர்

சென்னையில் சீர்மை, ஜவுளிகிடங்கு ஆலீஜனுப்

வெ. அப்துல்லா பாதுஷா சாஹிபவர்கள்

பொருளுதவியின் முயற்சையால்

சென்னை

P. ஷண்முகம் அண்டு கம்பெனியாரால் அச்சிடப்பட்டது.

முதற் பதிப்பு.

ஹிஜ்ராத்து 1348ம்
வருஷ துல் கஅதா மீ

ரிஜிஸ்த்தர்
காபிரைட்.

விலை அணா 6.

வி. பி. யில் அணா 9.

அறிவிப்பு.

முஸ்லிம் பிறவிகளே ! முன்னர் தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து முதற்பாகம் நல்அமல்விளக்கம், நயவழிதுலக்கம் என்னும் ரிஸாலஃவை கண்ணுற்ற கனவான்கள், இந்த இரண்டாம் பாகம் திருநபி யுகப்பும் தீனோர்கள் மதிப்பும், என்னும் ரிஸாலஃவில் பொதிந்துள்ள விஷயங்களைக் காண்பதற்கு சுருக்கமாக சொல்வதாவது:—இப்பிற்காலத்திற் சிலர் உம்மத்தோர்களென்று பெயர்வைத்துக்கொண்டு உம்மத்தோர்களின் மகிமையையும், சங்கையையும், அறியாமல் அமல்கள் செய்யாமல், வயதை வீணில் போக்கும் முஸ்லிம் சகோதரர்கள், கண்டறிந்து அமலன் சாலிஹாவைக் கைப்பற்றி இருலோகத்திலும் சம்பததுகளைப் பெற்று ஆனந்தமடைவார்களென்று ஹக் சுபுஹானுஹூ வதஆலாவினிடம் ஆதரவுவைத்து நமது நாயகர் நபீ ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லமவர்கள் தங்களருமையான உம்மத்தோர்கள் பேரில் வைத்துள்ள பிரியமும், உம்மத்தோர்களின் சங்கைகளும், ஷபாஅத்தே குப்ரு, சுக்ருவின் சேதிகளும் ஷரீஅத்து, தரீகத்து, ஹகீகத்து, மஅரிபத்து, இவைகள் இன்னதெனமுஸ்லிம் சகோதரர்கள் சுருக்கமாக விளங்கவும், இந்நான்கில் ஷரீஅத்துடைய மகிமைகளை சுட்டிக்காட்டியும், அமல்கள்செய்ய ஆவல் இல்லாத சோம்பேறிகள் மிகுத்த இக்காலத்தில் இலேசான அமல்களைக் காட்டுவதாக வெளிபட்ட ஷரஜ யுணராத ஷைகுகளுடைய தந்திரங்களையும், இன்னும் ஆதமுடைய மக்களை வழிகெடுக்கும் இப்லீசு லகுனத்துடைய நாட்டமும், குபாடமும், கலேப்பும், இதில் சொல்கள் சுறுக்கமாகவும் வாசகம் பெரியதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

விருப்பமுள்ள கனவான்கள் கைப்பற்றுமிடம்,

அஹ்ஸன் புக் டிபோ,
மேல்விஷாரம் P. O.,
நார்த் தார்க்காடு.

தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து

2-ம் பாகத்தின் அட்டவணைகள்.

—o—

பக்கம்.	விஷயம்.	பாடற் ரேகை.
3	ஹம்து, வநஅத்து காப்பு....................	2
	அவை யடக்கம்....................	6
7	தன்பீஃ....................	47
	இதில் நபியுல்லா அவர்கள் வாழ்நாளிலும், மிஅருஜிலும், மவுத்துடைய நோயிலும், கியாமநாளையில் எழும்பும்போதும், உம்மத்தோர்கள்பேரில் வைத்துள்ள பிரியத்தை தெளிவாகப் பேசியுள்ளன.	
14	ஷபாஅத்தே குப்ரு....................	30
	இதில் கியாமநாளையில் நபிமார்களிடம் ஷபாஅத்தைத் தேடலும், அவர்கள் பதில் சொல்வதும், விபரமாக பேசப்பட்டன.	
20	மஹ்றஷரில் இபுலீசுடைய போராட்டம்........	29
	இதில் நபியுல்லா அவர்கள், தங்களுருமை உம்மத்தோர்களை அழைத்தேகையில், புல்ஸிறுத்திடம் இப்லீசு லஅனத்தின் போராட்டங்களைக் கூறப்பட்டுள்ளன.	
23	ஷபாஅத்தே ஸுக்ரு....................	22
	இதில் ஈமானுடன் நற்கரைசேரும் விஷயங்கள் ஆனந்தம் பொதிந்துள்ளன.	
27	ஷரீஅத்தின் மகிமை....................	10
29	ஷராஇஉணாராத ஷைகுகளின் நடக்கைகள்.	6
30	இப்லீசின் நாட்டமும், குபாடமும்............	74
	இதில் இப்லீசுடைய அநேக குபாடங்களையும், நல்லோர்களை வழிகெடுக்க அவன் பற்பலவிதமாக செய்துவரும் முயற்சைகளும் விளக்கமாக பேசியுள்ளன.	
	அட்டவணை முற்றுப்பெற்றது.	

முஸ்லிம் பிறவிகளுக் குறிய நல்மாரா யங்களைக் கூறும்

புதிய கோர்வைகள்.

முஸ்லிம் சகோதரர்களே! ஒவ்வொரு முஸ்லிமாகிய ஆண்கள் பெண்களுக்கும் மிக்க அவசியமென்பது, அந்தந்த கித்தாபுகளுக்கு கொடுத்திருக்கும் பெயர்களைக்கொண்டே நன்கு விளங்கும்.

ஆகிலும் விஷயங்களின் சுருக்க வறிக்கையாவது:

1-வது தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து.

முதற்பாகம்—நல்அமல்விளக்கம், நயவழிதுலக்சம்.

இதில் அழியாத ஆகிரத்துக்குறிய சம்பத்துகள் பெற நப்சுக்கு நற்போதனைகள் அனந்தம் பேசியுள்ளது.

2-வது தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து.

இரண்டாபாகம்—திருநபியுகப்பும்; தீனோர்கள் மதிப்பும்.

இதில் நபியுல்லா(ஹ்)வின் உம்மத்தோர்களின் சங்கை, ஷைத்தான் லகுனத்தின் குபாடங்கள் கூறப்பட்டுள்ளது.

3-வது தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து.

மூன்ரும்பாகம்—முஅஜிஸாதே ரசூல்(மஅ) அதாலதே உமர்பாறூக்.

இதில் அநேக நஅத்துகள், மூடர்கள் காலத்தின் நடக்கைகள் அற்புதமான முஅஜிஸாக்கள்; உமர் றலியல்லாஹுஅன்ஹு அவர்கள் கிலாபத்து, நீதங்கள், நடக்கைகள், பொதிந்துள்ளது.

4-வது இஸ்லாஹுஸ் ஸவ்ஜைன் (என்னும்) புருஷபாரியர் சீர்திருத்தம்.

இதில் புருஷபாரியர் பக்ஷமுடன் வாழுந்தன்மைகளை இருலோகத்திலும் பெறும் பலன்களையும் தெளிவாக பேசி இருக்கிறது.

ஷை நான்கு புத்தகங்களும் ஒன்ருகசேர்த்து திறமான கலிகா மார்பல் ஆப் பயிண்டு புக் 1-க்கு ரூ. **1-4-0.** வி பி. யில் **1-8-0.**

5-வது ஷை நான்கு கிதாபுகளுடன் புஷாறுத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன் புத்தகம் 1-ம், அஹ்ஸனுல்முனுஜாத் (விதப்இ) குல்லில் பலிய்யாத். புத்தகம் 1-ம், இவ்விரண்டும் ஆக ஆறு வாலியமும் சேர்த்து திறமான சீர்மை கலிகாவினுல் டைய்யழுத்தி, கிலிட்டு குத்தி, திறமான பயிண்டு செய்த புத்தகம் 1-க்கு ரூ. **2—4—0.** வி.பி. யில் ரூ. **2—10—0.**

விருப்பமுளள்வர்கள் நேரில் அல்லது, எழுத விலாசம்,

அஹ்ஸன் புக் டிபோ,

மேல்விஷாரம் போஸ்ட், நார்த்தாக்காடு.

55

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

இஃது

தவ்லதே தாரைன்.

(என்னும்)

இருலோக சம்பத்து.

(இரண்டாம் பாகம்)

திருநபீ யுகப்பும், தீனோர்கள் சிறப்பும்

காப்பு வீருத்தம்.

திருநபீ யுகப்போடின்னும் தீனவர் சிறப்பைத் தொட்டு
மருளுமிச் சிறு நூல்தன்னை யவனியில் முஸ்லிமாண்பெண்
அருமையாய்ந் தமல்கள்செய்து ஆகிரில் ஜெயமடைய
மருங்குட னுரைப்பதர்க்கு மன்னவா காப்புநீயே. (1)

தோங்கல்.

எல்லாம் படைத்தொரு கொடையிலாளு மேகாந்த வல்லான் றனைப் புகழ்ந்து, நல்லார் நபியின்னும் சஹாபிகள்மேல் நவின்றே சலவாத்தும் சலாமுரைத்து, வல்லோன் நபியுல்லா உம்மத்தோர்மேல் வைத்தப்பிரியமும் உம்மத்தோர்கள், சல்லாபசங்கை சிலதைச் சாற்ற சாவில்லா வல்லான் காப்புத் தானே. (2)

அவை யடக்கம்.

தோங்கல்.

காலமாமிந்தக் கடேசிகாலங் க்த்தன்நபிஏவல் கருதாக் காலம்
ஆலநபியும்மத் தென்றகாலம் ஆகாகருமத்தை யுவந்தகாலம்

வாலவய தினே நம்புங்காலம் வம்பாம்வைசுகுகள் மிகுத்தகாலம்
நீலனிபுலிசுக் கிணங்குங்காலம் நிட்சயமிந்த காலமாய்ந்தே. (3)

முசுலிம்கள்மிகு மேல்விஷாரில் முஹம்மதிபுறுஹீம் அஹ்ஸனென் போன், இசுலாம் விளக்கிய நபியின்பேரில் என்றென்றும் தீனோர் சொல்செயலில், விசுவாசங்கொள்ளக் கடவாரென்றும் விளக்கமுடன் தீனோர் படித்தறிந்து, நசுக்கிநவிவாகு முடிவுநாளில் நலம்பெற விந்நூல் வெளியாகவே. (4)

சென்னையில் சீர்மை இனும் பனாரஸ் சிறப்பாம்பலதேசத் துகில்கிடங்கு, அன்பாய் வைத்தோங்கும் வேள்ளிகண்ணு அப்துல்லா பாஷா ஸாஹிபென்போர், இன்பாய்செய்பொருள் முயற்சையினால் இந்த நூல் வெளியான தாய்ந்து, அன்போடமல்செய்வார் பலனில் நாயன் அவர்கட்குமீவா னுக ஆமீன். (5)

பிந்தியக்கால மாமிதிலே பிறந்தமுஸ்லி மாண்பெண்கள் சிலர், அந்த முளதீனோர் வேடம்பூண்டு ஆயுள் வீணிலே கழிப்பவர்கள், நிந்தனைக் காளா யாகிடாமல் நேர்மையுடனுய்ந்து அமல்கள்செய்துப், பந்தமுடன்நாளை ஜெயமடையப் பாங்காம் உம்மத்தோர் சிறப்பை சொல்வாம்.

உம்மத் தோர்களின் சங்கை.

தோங்கல்.

சங்கையாகிய நபியுல்லாவின் சார்ந்த உம்மத்தி லுதித்தோர் சிலர்
பங்கப்புவியிலே உம்மத்தென்ற பட்டம்பெற்றபின் சட்டமீறி
அங்கம்வடிவுடை அரபிபேரும் அன்பாய்கிடைத்ததே போதுமென்று, சங்கையறியாத பிறவிகளே சாற்றகவனமாய் கேட்பீர்களே. (1)

முன்னோன் திருத்தூதர் முஹம்மதர்தா முத்தானவராயா லருளிசெய்தார், அன்பியாக்களின் உம்மத்திலே அல்லா எனதும்மத் தோர்கட்கீந்த, தென்பாந்தகுதியும் சங்கைப்போல திடனுய்செய் அமல் எளிதைப்போல, இன்பாக எந்த உம்மத்தோர்க்கு மிறையோன் கொடுத்திலே என்றுரைத்தார். (2)

முற்காலத்துள்ள உம்மத்தோர்மேல் முன்னோன் வணக்கமும் நோன்பும் ஸக்காத், கற்காயனந்தமாய் மிகக்கடிசாய் கடமையாக்கியும் பெரும்பாவத்தோர், மெற்கமுடன்தமை வெட்டிக்கொள்ள மேலோனேவினு னெனதும்மத்தில், தற்பாவஞ்செய்தோர் தௌபா செய்தால் துய்யோன் பொறுப்பானென்றிரசூல் சொன்னார். (3)

அருளினர் ஆதம்சபியுல்லாதாம் அஹ்மதநபியுல்லா உம்மத்தோர்க்கு மருங்காங் கருமத்து நான்குஉண்டும் மணமாகஅவ்வா ரெனக்குஇல்லே, கருமமென் தௌபாகஅபாவிலே கனதியாக்தௌபா அவர்க்கு எங்கும், நிருவாணியானே னவர்க்குஇல்லே கேர்மையவர்பீபி பிரிவதில்லே, ஒரு பாவத்தினுல் சொர்க்கம்விட்டேன் உற்றயவர்பாவந் தௌபாவினுல், சருகாதுப்புற வாய்சுவனம் சங்கையுடன்போகின்றார்களென்றார். (4)

உம்மத்தோர்களின் சங்கைத்தொட்டு மொருரிவாயத்தில் வந்ததைக் கேள், நம்மைப் படைத்தாளும் நாயகனும் நாளேமஹ்ஷரில் லவ்ஹு மஹ்பூஜ், தெம்பாய்தேடபி விறைந்தஹாவில் திட்டமாய்கண்டு ஐமஹ்பூஜ், உம்மிலெழுதுமென் தவ்ருத் ஸபூர் உகப்பாம் இஞ்சீலும் புறுகானெங்கே. (5)

என்றுகேட்கவே மஹ்பூஜப்போ வங்கிநடுங்கியே எங்நாயனே, நன்று ஜிப்ரயீல் என்னில்நின்றும் நலமாய்க்கொண்டுபோ னார்களென்ச, அன்று ஆண்டவன் ஜிப்ராயீலே அழைத்துக்கேட்கயில் நானெடுத்து, சென்று நபிமூசா தாவூத்ஈசா சிறந்த முஹம்மதர் வசமொப்பித்தேன். (6)

முன்னோனே என்றுமொழிந்தபோது முன்னுள்ள நபிமார்களேயே தன்பிரான் தன்னுல் கேள்க்கப்படும் தருமாயுங்களே நபியாக்கியே அன்பா யனுப்பிநான் வைத்ததற்கு ஆமென் நியமனேக் கட்டளேப்போல், என்னச் செய்தீர்க ளென்றுகேட்க யாறப்பிஎன பதிலுரைப்பார். (7)

உந்தனேவறு போல் காபிர்கள்மேல் உகப்பாய நாங்கள்போர் செய்து பின்னும், அந்தமறுவழி கேடர்களி லனந்தம்பேர்களுக் கறிவுரைத்

னும், சொந்த மாளம்மேல் கீஇறக்கும் சுருதிமறைகளில் மீளவைத்
தும், நிந்தனைப்பல வம்பர்களால் நெடியஇம்சைக ளனுபவித்தோம்.

இன்னுமவர்கட்கு முன்னுடைய ஏற்றமாராய முறைத்துபின்னும்,
நன்னையம்பெற அமல்கள்செய்ய நலமாவறிவுக ளுரைத்துவந்தோம்,
பின்னுமெங்களா லேன்றமட்டில் பெட்பின்றஹ்றமானே உந்தனுக்
காய், வின்னமாறில்லா அமலைச்செய்தோம் வேந்தர்கட்கெல்லாம்
வேந்தே என்பார். (9)

அந்த மொழிஎல்லாங் கேட்டிறைவன் அவ்வாறுங்கள்சொல் உண்
மையானால், பந்தமுடனீங்கள் நடந்ததற்கு பார்த்தசாட்சிக ளுண்
டோவென்க, சொந்த மெய்மீலே இன்னாரின்னர் சொல்வார்க்கண்
டதை என்றுரைக்க, அந்த சாட்சிகள் சரிவராது ஆமுண்மைசாக்ஷி
யாரெனிலோ. (10)

உங்கள்போலொத்த மனுக்களிலே உங்களிலல்லா கூட்டத்தோர்கள்,
தங்களில்யாருங் கண்டதுண்டா தகுமாய் சொலுமென்க உண்டு
மென்க, சங்கையுளவல்லோன் கூர்ந்தவாளை சாற்றுமவர்கள் யாரெ
ன்றுகேட்க, அங்கமுள ஆகிர்சபியாய்வந்த அஹ்மத்நபீதங்க ளும்
மத்தென்பார். (11)

அப்போதிருநாயன் பதிலுரைப்பான் அவர்களுக்குமுங் கட்கிடை
யில், செப்புமாயிரக் கணக்காண்டின்பின் ஜெனித்தவர் அவாள் எவ்
வாரதாய், ஒப்பமுடனேதா னுரைப்பாரென்க உண்மைசாட்சிகள்
அவர்தாமதால், தப்பாதவர்களை வரவழைத்து தனியோனே கேளு
மெனவுரைப்பார். (12)

அந்தமொழிவல்லான் கேட்டவாளை அழைத்துகேட்கவே பதிலுரை
ப்பார்,முந்தியுலகிலே வரும்நபிகள் முன்னேனே உந்தனேவற்போல
தந்தநபிபட்ட முனைதைப்பேணி தகுமாய்நடந்திட்டா ரென்றுபின்
னும், சிந்தைக்கலங்கிட காபிர்கள்மேல் ஜிஹாதவர்களும் செய்து
பின்னும். (13)

நீதானிறக்கிய வேதமீதில் நேர்மையாமீள தஅவாசெய்தும், ஆதார மிந்நா ளுக்குறிய அமல்கள் செய்தார்க ளென்றுரைக்க, தோதா யுரைத்திடும் சாட்சிகேட்டு துய்யவன்சொல்வா னென்மஹ்பூப், வேதாம்பர்நபி முஹம்மதரின் விருப்ப உம்மத்தின் கூட்டங் களா. (14)

அதிகாலத்துக்குப் பின்னர்நீங்கள் அவனியில்வந்தோர் எவ்வாறதாய், முதியோர்செய்கைகள் கண்டீரென்க உண்மைகண்டதை விண்டோ மென்க, அதிபதிவல்லான் கேட்டவுடன் அருமை என்ஹபீப்உம்மத் தோரே, நிதியாயுரைத்திடும் சாட்சியதின் நேர்மைசொல்லுங்கா ளென்க சொல்வார். (15)

ஆதிவல்லான் நீ எங்கள்பேரில் அனுப்பியகத்த முல்முர்ஸலீன், நீதர் நபிபேரில் நீஇறக்கும் நேர்மைபுறுகானு எனுமறையில், ஓதுமுன் திருவசனங்களே உகப்பாய் நாங்களுங் கண்டபோது, நாதர்நபிமார் கள் செய்தியெல்லாம் நாங்கள் கண்டதை விண்டோமென்றும். (16)

உந்தன் ஸாத்துஸி பாத்துக்களே உண்மையான உன்வசனங்களே சொந்தமாய்க்காணு திருந்தஹறாவில் சுணங்காஷக்கில்லா எமதுகல் பில், அந்தமுடனேதா னிருத்திநாவால் அருளும் வாறுபோல் புறு கானிலே, விந்தையாய்க்கண்ட திற்ஷக்கில்லே வேந்தேயிது நிஜ மென்றுரைப்பார். (17)

தகமையுடனிதை உம்மத்தோர்கள் தனியோன் றிருமுன்ன முரைத் தபோது, உகப்புடனிதை கேட்டுவல்லான் உரைசரியிதால் நபிமார் களே, முகம்மதாகிய என்ஹபீபுமுஸ்தபாஉம்மத் தோர்ஷாஹிதால் புகன்றஉம்செய்தி கேட்டுக்கொண்டேன் போங்கள் சுவனத்துக் கென ஏவுவான்.

தன்பீஃ.

மதனவீ இராகம்.

ஆகையாலே சங்கையும்மத் தோர்களா
ஆய்ந்துமனதில் நோட்டந்தான்செய் தீர்களா. (1)

அல்லாஹூஅக்பர் நமதுசங்கை மேன்மையும்
அறிந்திடாமல் உம்மத்தின்பெயர் வாங்கியும். (2)

அல்லா (ஹ்) றசூலின் ஏவலுணரா மானிடர்
ஹக்குபாத்தி லறியாமனம்போல் நடப்பவர். (3)

சங்கையும்மத் தோரிவரா வார்களா
அங்குசாட்சி நபிகளுக்குரைப் பார்களா. (4)

இல்லைஇல்லை இவர்கள்வேஷங் காட்டிகள்
தொல்லைநரகில் வேதனைப்பெறும் பாவிகள். (5)

அந்தக்கூட்டத் தோரைவிட்டும் ஆண்டவன்
பந்தமுடனெல் லோரைகார்க்க வேண்டினன். (6)

தோங்கல்.

வல்லோன் நபியுல்லா வாழ்நாளிலும் வரிசையாகிய மிஅருஜிலும்
பொல்லா காபிர்கள் தனைஎதிர்த்த போர்க்களமெனும் ஜங்கதிலும்
நல்லமவுத்தி னுேய்அடுத்தபோதும் நாளைமஹ்ஷரில் மன்ருடலும்
எல்லையுடன்தங்க ளும்மத்தோர்மேல் இதமாய்வைத்திடும் பிரியங்
கேளீர். (7)

மன்னர் நபியிடம்ஜீப்ரீல்வந்து மவுத்தின் சீக்கிலே மவுலகேளீர்
நன்றுநபிசா இத்ரீஸ்தம்மை நான்காம் வானிலும் சுவனத்திலும்
அன்பாயுயர்த்தியே கொண்டதுபோல் அன்பியாகட்கு நாயகமே
இன்பாய் தங்களையுயர்த்துந்தல மெதுவெனகேட்க பதிலுரைப்பார்.

அருமையாமெந்த னும்மத்தோர்கள் அழியுமண்மீதி லடங்கும்போது
பிரிந்து நான்மட்டும் வருகமாட்டேன் பிலத்திலெண்ணையும் தபன்
செய்யுங்காள், மரித்தமருங்குள்ள எனதும் மத்தோர் மஹ்ஷர்க்
கெழும்பும்போ தவர்களோடு, பரிவாய்துணையாக எழும்பியானும்
படைத்தோன் றிருமுன்னம் வருவேனென்றுர். (9)

நல்லார்நபீதாடி நரையைக்கண்ட நல்சித்தீக்கேட்க நவின்றுர் நபீ
அல்லா இறக்கின ஹூதேத்முர்ஸலாத் அம்மா வாகிஅ சூருநான்கில்

பொல்லாநரகச்சம் திடுக்கமாய்ந்து புகழானஎந்த னும்மத்தோர்மேல்
எல்லையுடனாகா நாடியழு மெனது அழுகையால் வெளுத்ததென்றார்

தங்கள் உம்மத்தை சிறப்பாக்கிட தனியோனிடம்நபீ மிஅறாஜுக்கு
அங்கமுடன் சென்றவிசளம்சில தருளக்கேட்டிதை தீனவர்கள்
தங்கள்கல்பிலே தரிப்படுத்தி தகுமாயமல்செய்து வெற்றிப்பெற
எங்கள்நபீமிஅ றாஜுக்குபோ மேற்றக்காரணங் கேட்பீர்களே. (11)

வானம்பூமியை நோக்கிஎன்னி லுண்டும்பைத்துல்மஅ மூரேனவே
தானமாம்பூமி என்றன்பேரில் தகுமாய் அகதஸ்உண்டென்கவே
வானமென்னிலே அருஷுண்டென்க வகுத்ததுபூமி கஅபத்துல்லா
ஜீனத்துடனென்னி லுண்டுமென்று செப்பவான்கேட்டு பதிலு
ரைக்கும். (12)

என்னி லேஉண்டும் சுவனம்ஹூறும் ஏற்றமாளிகைத் தோட்ட
மென்க, நன்றுபூமியும் சொன்னதப்போ நாயன்படைப்புகட் கேற்ற
மாயும், அன்பியாகட்கு முதன்மையான அஹ்மதுநபீ என்றன்பேரில்,
இன்புடன் வாசஞ் செய்கிறாரென் றியம்பவான்கேட்டுப் பணிவா
னதே. (13)

அப்போது வானம்அல்லாயிடம் அன்பாய்கேட்பதை யருளக்கேளீர்
ஒப்பமாயந்த நபியைக்காண உண்டுமிக ஆவல் எமக்குஎன்க, அப்
போ திறைசொன்ன ஒருகாலத்தில் அழைப்பே னவர்களை யும்மி
டத்தில், மெப்பாய்க் காண்குவீ ரென்றுரைத்த மேன்மைசபபாகும்
மிஅறாஜுக்கு. (14)

சங்கை நபியுல்லா ஜிப்ரீலுடன் சறுகாமிஅறாஜுக் கேகும்போது
அங்கமுடனெழு வான்கடந்து அருஷேமு அல்லாவை யடுத்தப்
போது, எங்கும்புகழ்பெற்ற நபிதமக்கு இறையோனருளினான் என்
ஹபீபே, தங்கமயமான அருஷிலேரி தகுமாயென்னிடம் வாருமென்
றான். (15)

அந்த சப்தத்தை கேட்டுநபீ அருஷில்கபுசோடெ நடப்பதற்கு
முந்திநபிமூசா கோஹதூரில் முன்னோனிடம்பேச சென்றபோது

விந்தைகபுசினே கழட்டிச்சென்ற விசளமது தனே ஆலோசித்து
எந்தவிதம்நம்ம கபுசுடனே ஏகுவதுஎன நாடலேக்கேள். (16)

அருஷில்கபுசோட நபிஏகிட ஆய்ந்துயோசிக்க ஹக்கன்சொன்னுன்
அருமையுள நீங்கள் மூசாவல்ல ஆகுமென்மஅ ஷூக் மஹ்பூப்
சருகாதுங்களின் கபுசடியை சங்கையுடன்பெற வெகுகாலமாய்
அருஷூக் காவலா யிருப்பதாலே அணிந்த கபுசோட வாருமென்ருன்.

அன்பும் பிரியமாய் நபியும்போக ஹக்கன்நபியுல்லா தம்மைப்பார்த்து நன்றென்ஹாமித் மஹ்மூதான நபியே எனக்கென்ன துஹ்பாத்தந் தீர், அன்பாய் சொல்லென்க பதிலுரைப்பார் அல்லாஹு உன்னில் இல்லாத்ததை, தென்பாகத்தந்தே னென்றுசொல்லத் திவ்யநபி தமை கேட்கலுற்ருன். (18)

என்றன்மஹ்பூபே என்னிலில்லா எந்த வஸ்த்ததைத் தந்தீரதை அன்பாய் சொல்லென்க அத்தஹிய்யாத் அதாகும் லில்லாஹி அல் லாவுக்கே, இன்னும் வஸ்ஸல வாத்துடனே ஏற்ற தய்யிபாத் தந்தே னென்ருர். (19)

அல்லா(ஹ்) பதில்தந்தான் அஸ்ஸலாமு அலேகஅய்யுஹன் ணபியுங்கள் மேல், நல்லா ரஹ்மத்தும் பறக்கத்தேன்க நவின்ருர் அஸ்ஸலாமு அலேஞ், அல்லாவுடபந்தா ஸாலிஹீன்கள் அவர்கள்பேரிலுமென்று நபி, நல்லாப்பலன்களே மிகசெய்யென்று நாயன்றனேக் கேட்ட பிரி யம்பாரீர். (21)

வேறு

ஓராமிரவிலே புருகிலேரி உடையோனிடஞ் சென்ருேர்பேசும் போது, பேராம்பெரியோனே யாறஹீமே பிரியரஹ்மானே உனதடி யார், சீராமெனதும்மத் தோர்க்குஆயுள் சின்னஞ்சிறியதா யிருப்ப தாலே, நேராம்அமல் கொஞ்சம் நியமித்திட்டாய் நெடியவாவென பதிலுரைப்பான். (22)

அன்பானஎந்தன் மஹ்பூபேதா மதையாய்ந்துஆயா சப்படாதீர்
மன்ஜாஅ என்னும்ஆயத்திலே மருங்காமொன்றுக்கு பத்தென்ற

போல், ஐன்பதொகுத்தவாள் தொழும்பலனை அருமையும்மத்தோர் கைந்தில்தந்தும்,நன்றவாளாறு மாதநோன்பை நலமோர் ரமலானில் தந்தேனென்ருன். (23)

இன்னும் உம்மத்தோர் பிழைகள்செய்தா லெழுதுங்காத்திபீனதை எழுதா, பின்ரண்டு ஜாமம்கார்த்துந் தெளபா பேணிசெய்கிடா ரேட்டிலொன்றை, அன்பாஎழுதியு மவர்கள்பின்னுல் ஆகும்தௌபாவைச் செய்தாராகில், துன்பபாவத்தை யழிக்கசெய்வேன் துய்ய மஹ்றூபே என்றுரைத்தான். (24)

ஹக்கன்பிரியமாய் நபியைப்பார்த்து அஹ்மதேதங்கள் கேட்பதை நான், தக்கபடிதாரேன் கேளுமென்க தாஹாநபீகேட்டா ரென்னு யனே, ஹக்காமென்னுட உம்மத்தோர்செய் அமால் வரைந்துள்ள *பட்டோலையை, துக்க மஹ்ஷரி லென்வசமாய் துய்யவாதர வேணு மென்ருர். (25)

தோங்கல்.

அல்லாவருளினு னென்ஹபீபே அன்பாய்படைத்தஎன் படைக்கோலங்கள், நல்லான்நான் அல்லா(ஹ்) ஒருவனென்றும் நலமாவென்னுட அடியரென்றும், எல்லாமறியவே நானேகேட்டு ஏற்ற உம்மத்தோர் சென்றபின்பு, நல்லார்பின்னுள்ள உம்மத்தோரை நானனுப்புவேன் நபியேஎன்ருன். (26)

* அன்பர்களே "உம்மத்தோர்களின் பட்டோலையை நமது நாயகர்நபீ (அலைஹி)அவர்கள் தங்கள் வசம்கொடுக்க அல்லா(ஹ்) இடம்கேட்டதின்கருத்தைப்பற்றி சங்கைபொருந்திய உலமாக்களை தொட்டும்பேசி வரப்பட்டதாவது, அன்பதாயிரம் வருடங்கொண்ட நீண்டமஹ்ஷருடைய நாளையில் எல்லாநபிமார்களுடைய உம்மத்தோர்களுக்கு முன் தங்களருமை யும்மத்தோர்களை கேள்விக்கேட்டு மஹ்ஷருடைய அமளியைவிட்டும் தவிர்க்கச்செய்யும் முஹப்பத்தாகுமென்பதே.

மன்னர்நபிகோயில் ஜிப்ராயீலே மன்னே னெனக்கென்ன நல்மாராயம் சொன்ன னெனக்கேட்க ஜிப்ரீலப்போ சொன்னார்தங்களே சுவனத்திலே, அன்பாய் சேர்க்குமுன் நபிகளுக்கு அந்தப்பதிஹறு மென்றதுபோல், நன்றும் உம்மத்தோர் எல்லோர்க்குமுன் நற்பதிபோவாரென்றுரைத்தார். (27)

குத்துபா ராகம்.

தங்கள்றாஹூ நெஞ்ஜில்வரும்போ தருளினர் மூமின்களே
நீங்கள் தொழுகையைப் பற்றிபிடியும் உம்மத்தீஎன் றூர்களே. (28)

றப்பஞ என் உம்மத்தோர்கள் பிழைபொறுத்து ஆதரீ
என்று மூச்சு ஒடுங்கயிலே உம்மத்தீ என் றூர்களே. (29)

தொங்கல்.

சங்கைஹிஜுறத்து பதினென்றதில் சார்ந்தப்பனிரண்டு றபீஉலவ்வல், திங்கள் கிழமைக்கி சரிசுஸ்வி தேர்ந்தஅறு நாத்தி முப்பத்ரண்டின், அங்கமுளமாதம் சூனெட்டிலே அல்லாவின் திரு மஹ்றபூபானேர் தங்களும்மத்தின் ஏக்கத்தோடே தாரேதுனியாவை விட்டகன்றூர்.

அருளினர் கதம்இப்னு அப்பாஸ் ஹக்கன்மஹ்றபூபைகபுரில் வைக்க, சருகா வாய்நேரே கபனசைய சபபுயாதென்று பார்த்தறியப், பிரியமுடனெந்தன் செவியைதாழ்த்தப் பிசகாதுசப்தம் உம்மத்தீஎன், றுருதி யாம்சொல்லா ஓதடாடிட உகப்பாய்க் கேட்டதை உரைத்தேனென்றூர். (31)

மதனவீ இராகம்.

மஹ்றஷரிலே நீதம்செலுத்த நாயனும்
மாண்டபடைப்பை எழுப்பவேண்டி நாடியும். (32)

முதல் முகர்றப் நான்குமலக்கை எழுப்புவான்
முன்னரென்மஹ்றபூபையழைபு மென்குவான். (33)

ஏனென்றூலோ என்றன்மஹ்றபூப் எழும்புமுன்
எழும்பல்ஹறூம் மற்றுமனுக்கள் கூர்ந்துசுன். (34)

என்ஹபீப்றவ் லாயிடம்போய் நால்வரும்
எழுப்பிவாரு மென்கபோவார் தேடியும். (35)

உலகமுழுதும் பார்க்கஒரு அடையாளமும்
உற்றக்காடு மேடுகள்இல் லாமலும். (36)

பின்மதீனு பூமிவருக ஒளிவதும்
பிரகாசமாக வானம்வரையில் ஜொலிக்கவும். (37)

கண்டிதுவே ஆகும்றவ்லா என்றவாள்
கருதிநால்வர் அழைக்கும்விபரங் கேளுமால். (38)

குத்துபா இராகம்.

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்கயா றசூலல்லா
ஹக்கன்நபியே என்றுமீக்கா யீல்அலைஹி எழுப்புவார். (39)

எழும்பிடாதால் பின்இஸ்ரு பீல்அலைஹி சொல்லுவார்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாம்அலைக்கயா ஹபீபல்லாஹ். (40)

பதிலில்லாதால் இஸ்ருபீல் அலைஹிசலவாத் தும்சலாம்
பகர்ந்தெழும்பும் றஹ்மதுன்லில் ஆலமீனே என்குவார். (41)

அதற்கும்பதிலில் லாததாலே அழுதுக்கொண்டே ஜிப்ராஈல்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்கஎன்றே எங்கியும். (42)

யா காத்தமன்ன பியே எங்கள் நாயகமே என்றுபின்
யாஷபீஇல் முதுனபீனே எழும்புமென்றே அழைத்ததும். (43)

அப்போது லப்பைக் உம்மத்திஎன் உம்மதீஎன் றெழும்பியே
ஐஅகிபாய் ஜிப்ரயீலே உம்மத்தெங்கே என்குவார். (44)

ஜிப்ரீல்சொல்வார் நாயகமே தங்களெழும்பு முன்னவாள்
எழும்புவது ஆகும்ஹறும் ஆகையால்பின் னெழும்புவார். (45)

இந்தவிதமாய் ஜிப்ரயீல் நபிதமக்கு சொல்வதாய்
எற்றமாக வந்ததாலே கேட்டுக்கொள்வீர் கவனமாய். (46)

தோங்கல்.

நல்லார் நபிதங்கள் உம்மத்தோர்மேல் நலத்தைப்பிரியத்தை வைத்த துவும், எல்லா முஸ்லிமாண் பெண்களானோர் இறையோன் நபிபே ரில் பிரியம்வைத்து, பொல்லாப் புவிநம்பாஅமல்கள் செய்து பூரித்துவாழ இரண்டுலோகில், நல்லார் நபிநாளை மஹ்ஷரிலே நமக்கு செய்ஷபா அத்தைக் கேளீர், (47)

ஷபா அத்தே குப்ரு.

தொங்கல்.

உலகவாழ்க்கையால் அல்லாவையும் உண்மை ஆகிரத் நாளதையும் நலமார் நபியுல்லா சொல்செயலும் நழுகவேவிட்டும் நானிலத்தில் பலபாடு பட்டு சம்பாதித்துப் பயணவேளையில் பரிதாபமாய், கலக் கமாய் சென்றோர் கடைநாளையில் கைசேதப்படுங் கோலங்கேளீர். ()

அதிபன் நீதஞ்செய் மஹ்ஷரிலே ஆருந்தனைசூட்டின் அமளியிலே பதியின் நபிமார்கள் நப்ஸீ நப்ஸீ படைத்தோனே எம்மைக் காரென் கயில், கதிரோன் சூட்டினுல் மனுவோர்மூளைக் கருகியுருகியே பெருகிடும்நீர், குதிக்கால் வழியோடு மதிலேமுங்கி கொதிப்பால் கலக்கமாய் சொல்வார்களே. (2)

அன்பதாயிரம் வருடம்வரை அமளிமஹ்ஷரில் யாமெல்லோரும் துன்பப்படுவதைக் கேள்ப்பாரில்லைத் தொல்லைத்தீர்ப்பவர் எவரு மில்லை, என்னசெய்பலா மெவரிடத்தில் எமது குறைகளை சொல்வ தென்று, நன்றுயோசித்து தீர்மானித்து நபிஆதம்மிடம் போவார் களே. (3)

அப்போநபி ஆதம்நப்ஸீ நப்ஸீ அல்லாஎன்னைக்கா ரெனைக்காரெ ன்க, சப்பாய்போனவ ரழுதுரைப்பார் சங்கையுளவெங்கள் தகப்ப னரே, மெப்பாய்தாய்தந்தை யில்லாமலே மேலான்குதறத்தின்

கையைக் கொண்டு, தப்பாதுங்களை யுண்டாக்கினுன் தருமாஇல்
மெல்லாங் கற்பித்தானே. (4)

இன்னும் வானோர்கள் யாபேரையும் எற்றமாய் சுஜூதுச் செய்யவைத்
தான், பின்னுமுங்களின் அவ்லாதிலே பிலத்தி லெமையெல்லா,
மமைத்துவைத்தான், அன்பாயும்மையும் பீபியையு மழகாம்சொர்க்
கத்தி லிருக்கச்செய்தான், நன்றுய்அஷ்ரபுல் மக்லூகென்ற நலத்த
நாமத்தை தமக்களித்தான். (5)

ஆகையாலெங்கள் தகப்பனுரே அருமையாமுங்கள் மக்கள்ஹாலே
ஜாகையிதிலிப்போ நோட்டமிடும் சருகாமஹ்ஷரி னமளியில்யாம்
பாகாயுருகலைக் கேட்பாரில்லை பரிதாபந்தீர்ப்பா ரெவருமில்லை
ஈகைஇறக்கமாய் தங்களிப்போ எமக்குஷபாஅத்து செய்யுமென்
பார். (6)

அந்த மொழியாதம் நபிகேட்டதும் அருளுவாரெந்தன் விசயத்
திலே, பந்தமுடனீங்கள் பகர்ந்ததெல்லாம் பாங்காயுள்ளதே சரியா
கிலும், எந்தனிறையவன் ஏவல்மீரி யான்கோதும்பையின் கனிபுசித்
தேன், அந்தசபபினுல் வெட்கித்துள்ளேன் அதிபணிக்கேட்க முடி
யாதென்னுல். (7)

எல்லோரும்போங்கள் நபிநூஹிடம் என்று தம்சொல்லக் கேட்டெல்
லோரும், அல்லல் மிகப்பட்டு வழுதுக்கொண்டு அவர்கள்கைகளைப்
பிசைந்தவருய், தொல்லைமிகக்கொண்டு நபிநூஹிடம் துக்கித்து
சொல்வார் நாயகமே, அல்லா(ஹ்)உங்கள் மேலுகப்பாகினுன் அருளி
னுன் உலுல்அஸ்மிஎன்றே. (8)

இன்னும் பெரும்ஜலப் பிரளியத்தில் இறையோனும்மையும் கூட்டத்
தையும், அன்பாகசலா மத்தாக்கினுன் அழகாமும்மிஆ குபுலுசெய்
தான், முன்னேனுகப்பும்மே விருப்பதினுல் மூண்டஎங்கள்ஹால்
நோட்டமிட்டு, துன்பமகலவே ஷபாஅத்திதாம் துய்தாய்செய்யுங்க
ளென்பார்களே. (9)

நாகுநபியப்போ பதிலுரைப்பார் நுவன்ற உங்கள்சொல் சரியாகி னும், ஏகனுடஏவல் இல்லாமலே எந்தன்மகனை கின்ஆனுக்கு, வாகாய்நான் துஆ செய்வகையில் வல்லோன் கோபமாயிருக்கப் போ தும், ஆகையாலிதால் வெட்கமுற்றேன் அல்லா(ஹ்)யிடங்கேட்க முடியாதென்னால். (10)

இப்போஇபுறுஹீம்நபியிடத்தில் எல்லோரும்போங்க ளென்றுரைப் பார், அப்போதெல்லோரு மழுதுக்கொண்டு ஹக்கன்கலீலிடம் வந் துரைப்பார், தப்பாதிறையவன் தங்களையே தன்கலீலாகத் தெரிந் தெடுத்தான்,மெப்பாய்நம்றூதின் நெருப்பின்சூட்டை மிக்கக் குளிர்ச் சையா யாக்கித் தந்தான். (11)

தங்கள்கட்டின கஅபாவதை தரணிதனிலுள்ளப் பள்ளிக்கெல் லாம், சங்கையாகிய பள்ளியென்றும் சந்திக்களம்மேல் விதியாக்கி னன், அங்கமாய்உலுல் அஸ்மிஎன்முன் ஆகையால்தங்களிந்தநேரம், எங்கள்ஹாலத்தை நோட்டஞ்செய்து எமக்குஷபாஅத்து செய்யு மென்பார். (12)

சொல்வார்நபிகலீல் நீங்களிப்போ சொன்னவகையெல்லாம் சரியாகி லும், பல்லுறவென்னி லிரண்டுதவர் பத்திஇருப்பதி லொன்றுவது; தொல்லைக் காபிர்கள்புத்துக்களைத் துண்டாயுடைத்து நான்கோடா லியை, வல்லப் பெரும்புத்தின் தோளில்மாட்டி வழைத்துளனை கேட்க பெரும்புத்துதான். (13)

உடைத்துஇருக்கலா மென்றியானும் உரைத்த தவராலு மிரண்டா வது, அடவாய் ஷாம்தேசம் நானேகயில் அன்பாமென்பீபி சாரா தமை, இடையில்ராஜனும் பிடித்துஎன்னை இப்பெண்யாரென்க தங்கைஎன்றேன், சடையாதுரைத்தஇத் தவிரண்டால் ஷபா அத்துசெய்ய வெட்கமுற்றேன். (14)

நீங்கள்நபீமூசா விடம்போமென்க நெஞ்சங்கந் கலங்கியே எல்லோ ருமாய், எங்கித்தியங்கியே அழுதுக்கொண்டு ஏற்றநபிமூசா தம்

மைக்கண்டு, தாங்களே அல்லா(ஹ்) கோஹேதூரில் தருவித் தும்மோடு வசனம்செய்தான், பாங்காம் தவ்ருத்தை தமக்களித்தான் பட்ச முடன்கலீ முல்லாவென்றான். (15)

இன னும்பிர்அவ்னு மவன்கவ்முமேல் ஏற்றவெற்றியை யுமக்குதந்தான், பின்னுமேஉலுல் அஸ்மிஎன்றே பெயரிட்டழைத்தன னுகையினால், துன்பமெங்கள்மே லடர்ந்துவை துய்தாய்தாங்களும்கோட்டமிட்டு, முன்னேனவன் ஷபாஅத்துசெய்ய உகந்துக்கேளுங்க ளௌனவுரைப்பார். (16)

அப்போநபிமூசா நீங்கள்சொன்ன ஆகமம்சரி யாகிலும்யான் தப்பாதுரண்டு தவர்கள்செய்தேன் தருமாய் முதல்தவர் நீலாற்றிலே, ஒப்பாய்பிர்அவ்னு மூழ்கும்போது ஓதுமவனுட *உரையைக் கேளா, மெப்பாயவனையான் திரும்பிப்பார்க்கா மீண்டஎன்தவ ருகுமென்றும். (17)

இரண்டாம் தவறுதல்§ அல்லாயிடம் இன்பாய்வஜனிக்கப் போகயில்யான், திரமாமென்தம்பி ஹாறூன்வசம் திவ்யஉம்மத்தை ஒப்புவித்து, பரமனிடம்போயி பேசிவந்தும் பார்க்கஉம்மத்தோர் சாமிரியின், மரமமறியாமல் பசுவைப்பூஜை மதிப்பாய் செய்துக்கொண்டிருந்தார்களே. (18)

இந்தக் குறையைநான் வந்துகண்டு எனதுகோபத்தால் மனதுநொந்து, பந்தமுள ஹாறூன் நபிதாடியைப் பத்திப்பிடித்துநான் அடிக்க

---

*கால ஆமன்து அன்னஹு லாயிலாஹ இல்லல்லஜீ ஆமனத்பிஹி பனூஇஸ்ரயீல வஅனு மினல்முஸ்லிமீன்.

(இதன்பொருள்): பனூஇஸ்ருயில்கள் ஈமான்கொண்டார்களே, அந்த அல்லா(ஹ்) ஒருவனைத்தவிர வேறுநாயனில்லை என்று ஈமான் கொண்டேன். இன்னும்நான் முஸ்லிம்களில் நின்றுமாயிருக்குமென்று பிர்அவன் சொன்னான்.

§ தவறுதல் என்பது, தவருத் வேத மிறங்கும்போது 40 நாள் வரையில்.

வப்போ, அந்தமுளவல்லா னருளனுற்ருன் ஐமூசாஉங்க ளும்மத் தோரை, எந்தன்வசம்சாட்டி இருப்பீராகில் இவர்கள்காபிரா யாகா ரென்ருன். (19)

ஆகையாலிந்தத் தவிரண்டும் அடவாயென்னிலே இருப்பதினல் ஏகனிடங்கேட்க சக்தியில்லே ஈசாநபியிடம் நீங்களெல்லாம், போகு மெனநபீமூசாசொல்லப் பொருந்தாத்துயரமா யழுதுஎங்கி, வாகுட னெல்லாம் நபிஈசாவை வண்மையுடன்கண்டு சொல்வார்களே. (20)

அல்லாதங்களேத் தகப்பனில்லா அமைத்தான் தன்னுட குதாரத்தி ஞல், நல்லாஇஞ்ஜீலே யுமக்குதந்தான் நாமம்றூஹுல்லா வெனசூட் டினுன், பொல்லாப் பகைவரை விட்டுங்களேப் புகழாய்சதுர்வானி லேந்திக்கொண்டான், சல்லாபஉலுல் அஸ்மாகவே சங்கையாய்தமை தெரிந் தெடுத்தான். (21)

இத்தகைசங்கை பெரும்நபியே எங்கள்ஹால்களே நோட்டஞ்செய்து, கத்தனிடத்திலே ஷபாஅத்தைதாங் கருணேயுடன்செய்ய வேணு மென்க, மெத்தஇரக்கமாய் ஈசாசொல்வார் மேன்மையும்மொழி சரியாகினும், சுத்தமுணராம லெந்தன்பேரில் சொன்னுர்படுதூ ரென் னும்மத்தோரே. (22)

ஈசாமர்யமு மிறையவனும் இதமாயொருஸாத்த தென்ருர்சிலர், ஆ சான்மகனீசா என்ருர்சிலர் அல்லாதான் ஈசாறூபமாக, கூசாமல் வந்தா ரென்ருர்சிலர் கூட்டத்தாரிவ்வார் தூஷணேகள், ஓசாரம் பேச லால்வெட்கித்தேன் உடையோனிடங்கேட்க முடியாதென் ஞல். (23)

பிந்தாதுநீங்க ளிந்தநேரம் பெரியோன் மஹ்பூபும் மஅஷூகான, கந் தங்கமழ்நபீ முஹம்மதிடம் கடுகப்போமென்பா ரதைக்கேட்டதும், சிந்தைத்துயரமா யழுதுக்கொண்டு சென்று அஹ்மது நபியைத்தேடி அந்தமுடன்கண்டு மதஹுசெய்து அவர்கள்குறைகளே சொல்வார் களே. (24)

அப்போஅஹ்மது நபீயவர்கள் அன்பாம் உம்மத்தோர் ஹால்கள் கண்டு, தப்பாதேக்கமாய் மிகவேங்கியே தருமானஎந்தன் உம்மத்தோரே, ஒப்பமுடன்ஆதம் நூஹு ம்கலீல் உலுல்அஸ்மிகள் தம்மிடம்போய், மெய்பாயும்குறை சொல்லொண்ணுதா மேன்மைஉம்மத்தே என்றுகேட்பார். (25)

அந்த மொழியவாள் கேட்டுஆதம் அவர்கள்முதல்ஈசா நபிவரையில் பந்தமுடன்கேட்டக் குறைகளையும் பதிலவாள்சொன்ன விபரத்தையும், சிந்தைக் கலங்கியே அழுதுரைக்க செம்மல் நபீகேட்டுத் துயரப்பட்டு, எந்தனும்மத்தின் கூட்டங்களா இவ்வாரிடராச்சா உங்கட்கென்றே. (26)

அப்போநபியுல்லா உம்மத்தோரை அன்பாகபார்த்து ஆஹ்என்றே, ஒப்பமுளஎந்த னும்மத்தோரே உற்றசபர்சற்றே செய்யுமென்றும், தப்பாதெழும்பாயில் ஜிப்ரீல்வந்து தருமானமகா மன்மஹ்மூத், மெய்பாந்தலத்திலே விடுவாரப்போ மேலோன்நபியுல்லா தமக்கந்நேரம்.

நூறுசுஹு பின்னும் நான்குவேதம் நுவலுமிவைகளி வில்லாப்புகழ் யாருமறியாதப் புகழ்ச்சியெல்லாம் ஹக்கனறிவிப்பான் அஹ்மதற்கு, சீரும்சிறப்புமாய் சிறந்தவனே செம்மல் நபிமிகப் புகழ்ந்து சுஜூத், நேருடன்மூன்றுஞ் செய்வாரப்போ நெடியோனுரைக்குவானந்நேரமே. (28)

எனதுமஹ்பூபே அஹ்மதரே எற்றஹாமிதே மஹ்மூதரரே, மனதுள் நாடலை யான்கொடுப்பேன் மருங்காமும்தலை யுயர்த்துமென்பான், வினவல்கேட்டதுந் தலையுயர்த்த வேந்தன்நபியுல்லா உம்மத்தோர்கள், கனகியாமத்து அமளிவிட்டுங் கலக்கம்நீங்கியே நிற்பார்களே.

அப்போதுநீதம் கேள்வீமீஜாண் ஆகிகல்லோர்கள் பாலந்தாண்டி, மெய்பாம்பதி சோர்க்கமுட்புகுந்து மிக்கவானந்த மாயிருப்பார், தப்பாம்பாவஞ்செய் யும்மத்தோரை தனியோனிடம்நபீ மன்றாடியே, சப்பாய்க்கூட்டியே யழைத்தேகயில் ஷைத்தான்இப்லீசின் சதியைக் கேளீர். (30)

மஹ்ஷரில் இப்லீசுடைய போராட்டம்.

—ઢ—

தோங்கல்.

மன்னர் நபிதங்க ளும்மத் தோர்க்கு மன்ருட் டஞ்செய்து மன்னே னிடம், அன்பாய்கேட்டவ ரழுதுகெஞ்ஜி அல்லாநீபெருங் கிருபை யாளன், நன்றான் றஹ்மத்தா லென்உம்மத்தை நானழைத்துபோய் சுவனம்புக, இன்பாயேவல்செய் அல்லா(ஹ்)வெங்க இறையோனி தைகுபூல் செய்யும்நேரம். (1)

ஆலநபியும்மத் தோரையெல்லாம் அழைத்து புல்சிறுத் தளவிற் செல்ல, நீலனிபுலீசு வேண்டாமென்று நேர்மை நபியுடன் வாதா டியே, காலமுந்தங்கள் சொல்பேணியே கருதி நடந்தோரை யழைத் துப்போங்கள், சீலமுடனெந்தன் சொல்பற்றியே ஜெகத்தில் நடந் தோரை விடுங்களென்பான். (2)

அப்போதுநபீ அல்லாயிடம் அஸாஸீல் லஅனத்தின் போராடலே தப்பாதுரைக்கவே கேட்டுவல்லான் தருகணன்றனே யழைத்தந் நேரம்; மெப்பாமென்ஹபீப் போம்ஸிறுத்தில் மீளாதர்க்கங்க ளிவன் செய்ததால், ஒப்ப மாய்நாரில் தள்ளுமென்று உடனேவானோர்க்கு ஏவல்செய்வான். (3)

மஸனவீ.

இப்லீசைநரகிற் றள்ளப்போகும் வேளேயில்
இப்னேஇப்னே என்றழைப்பான் மஹ்ஷரில். (4)

நாயன்கேட்பான் யாரெடாஉன் இபுனுகள்
மாயனிபுலீஸ் மவுல்வான்மக்கள் யாரெனில். (5)

ஷறஉசட்டம் விலகினோரென் இப்னுதான்
பரலானதொழுகைத் தொழுதிடாரென் இப்னுதான். (6)

நோன்புஸக்காத் ஹஜ்ஜைபற்ரூர் இப்னுதான்
மேன்மைதீனை இழந்தவர்என் இப்னுதான். (7)

ஷிற்குசெயலைச் செய்துவந்தோர் இப்னுதான்
ஷிற்குசெய்ய ஏவினேரென் இப்னுதான். (8)

கள்ளுசாராயங்குடித்தோர் இப்னுதான்
சள்ளைகெஞ்ஜா வபினையுண்டோர் இப்னுதான். (9)

வட்டிவாங்கி வயர்வளர்த்தோ ரிப்னுதான்
கொட்டுமேளங் கொட்டினேரென் இப்னுதான். (10)

கூத்துபார்த்து திரிந்தவர்என் இப்னுதான்
ஹாத்திவேலை செய்தவர்என் இப்னுதான். (11)

கோள்சொல்லி குடிகெடுத்தோ ரிப்னுதான்
கொலைகளவு செய்தவர்என் இப்னுதான். (12)

இத்தாதிபாவஞ் செய்தனது இப்னுகள்
செத்தார்கள்தௌபா செய்திடாமற் பாவிகள். (13)

கண்ணி ராகம்.

இந்த விதமக்கள் இயல்பை லஈன் எடுத்துரைக்க
அந்த மில்லான்கேட்டு அழைத்துநீ போடாஎன்பான். (14)

மஸனவீ.

இப்லீசுமப்போ கூப்பிடுவான் மக்களா
எந்தன்வீட்டை வந்துபாரும் மக்களா. (15)

என்னைப்போல வணக்கஞ்செய்தோர் மக்களா
இரண்டுலோகில் எவருமில்லை மக்களா. (16)

கல்லுமுள்ளு மலைசெடிமேல் மக்களா
கத்தனைநான் வணங்கிவந்தேன் மக்களா. (17)

நான்வணங்கா தலங்களேதும் மக்களா
நாயனறிய இல்லேகேளு மக்களா. (18)

ஏழுவானம் மேலும்சென்றேன் மக்களா
ஏகனமைத்த அறுஷைபார்த்தேன் மக்களா. (19)

குர்ஸிலவ்ஹும் கலமுமஹ்பூஜ் மக்களா
பிரிசசையிரு செய்துபார்த்தேன் மக்களா. (20)

ஏற்றமான சுவனம்பார்த்தேன் மக்களா
எரியும்நரக அமளிபார்த்தேன் மக்களா. (21)

இதுகளெல்லாம் நானுங்கண்டே மக்களா
எனக்குநேர்ந்த கேட்டையறிவீர் மக்களா. (22)

நாயனுரைபோ லொருசஜதா மக்களா
நானும்விட்டு நாசமானேன் மக்களா. (23

நீங்களேத்தனே சொற்றட்டினீர் மக்களா
எங்கிஇப்போ நிற்பதேனே மக்களா. (24)

நமதுவாச தலத்தைப்பாரு மக்களா
உமதுகூட நானிருப்பேன் மக்களா. (25)

பயப்படாதீ ரெனதுஇருகண் விழிகளா
பயமதேனே நானிருக்க மக்களா. (26)

என்றிபுலீ சுரைத்துநரகில் சேர்ப்பதாய்
ஏற்றவறிவா ளர்கள்சொன்னார் திட்டமாய். (27)

ஆதிநாயகன் உம்மத்தோர்க்கு ஆழ்ந்தக் கருத்துள்ளவறிவைத் தந்து, நீதிநபியுல்லா நடக்கைப்பேணி நேர்மைஅமல்களை உகந்து செய்து, தீதில்லாபதி சொர்க்கம் சேர தீங்கன்இப்லீசன் வஸ்வாசானல், ஒதிலாஹவ்லா யவனை யோட்ட உகப்பாங் தவ்பீகைத் தருக ஆமீன். (28)

அல்லா(ஹ்) அருளையும் அவன்மஹ்பூப் அஹ்மதநபிதங்கள் சொல் செயலை, சல்லாபமாக பற்றிசொர்க்கம் சங்கையுடன்சேரா நரகி

லாழ்த்தும், பொல்லா னிபுலிசி னுடந்தையாக போனபாதகர் நரகில் வெந்து, பல்லாயிரமாண்டாய் சஞசலமாய் பதைத்துத் துடித்தழு திருப்பார்களே. (29)

ஷபா அத்தே ஸுக்ரு.

தோங்கல்.

தின்மைசெய்தரும் உம்மத்தோர்கள் தீயாம்நரகத்தில் வெகுகால மாய், துன்பமாகவே பரதவிக்கத் துய்யோன்பலகாலம் சென்ற தின்பின், வன்னிநரகிலாழ் உம்மத்தோர்ஹால் வண்மை யுடன் பார்த்து வாருமென்று, நன்றுஜிப்ரயீல் தமக்குஎவ நரகவழி* அமீன் செல்லும்போது. (29)

நரகமாலிக்கு எழும்பி சலாம் நவிலஜிப்ரயீல் பதிலுரைக்க வரவேதுக்கென்று நரகமாலிக் வண்மையுடன்கேட்க ஜிப்ரயீலும் பரமனேவலால் வந்தேனென்க பண்பேவலென்ன தந்தீரென்க பிரத்திசொல்லுவார் உம்மத்தோர்ஹால் பார்த்துவர சொன்னன் என்பார்களே. (30)

அப்போதுமாலிக் கருளுவார்கள் அவர்கள்ஜடலம்வெந் துருகிப் போச்சு, ஒப்பமுடனவாள் மேனியதில் உயிருமெலும்பல்லால் எது வுமில்லே, மெப்பாம் பிலமில்லேப் பாருமென்று மிகைப்பாந் தீமிகு நரகவாயல், தப்பாமல்லவர் திறந்துக்காட்டத் தணலாழ் நரகிகள் சப்தமிட்டே. (3)

அலரியமுதவா ளோடிவந்து ஜமாலிக்கே தாமுண்மையாக, நலம் சொல்லுமிவர் ஆராகிடும் நரகர்எமைபார்க்க வந்தவர்யார், துலங்கு மிவர்முகம் பார்த்தெமக்கு துயய்வாதர வாய்காண்பதால், சலிக்கு மெமக்கிவர் பெயரைசொல்லும் சங்கைமாலிகே என்றுகேட்பார். (4)

*அமீன் என்பது, ஜிப்ரயீல் அமீன் என்றறிக.

அந்தமொழிகேட்ட மாலிக்கவர் அவனியில்நீங்கள் வாழ்நாளையில், பந்தமுளநாய னேவற்படி பயகாம்பர்நபீ ஷறயின்படி, அந்தமாகவே நடந்திருந்தால் அமரார்ஜிப்ரயீ லிவர்தானென்று, விந்தையறியாம லிவர்யாரென்று விரும்பிக்கேட்பீரா வென்றுரைப்பார். (5)

நன்றுஜிப்ரயீல் என்னும் பெயரை நரகவாதிகள் கேட்டுஎல்லாம் ஒன்ருய்க்கூடியே ஒலமிட்டே உரைப்பாரெங்களின் ஜிப்ரயீலே அன்பாகஅல்லா புறத்தில்நின்றும் அடவாக வஹீ எம்நபிக்கி இன்பாகதரும் புறுகானதில் எமக்குநபிஷபா அத்துச்செய்வார். (6)

என்றிறைவனு முரைத்ததல்லால் எங்கள்முஹம்மது நபியவர்கள் அன்பா யுரைத்திடும் பலஹதீதில் அவர்க ளும்மத்தில் பாவஞ் செய்த, துன்பத்தார்க்குஷ பாஅத்துநான் துய்தாய்செய்குவே னென் றுரைத்தார், இன்னவிதம் தலீல் ஹதீதுகளும் இயல்பா யனந்தமாய் வந்ததுண்மை. (7)

இந்தவிதம்தலீல் ஹதீதிருக்க யாங்கள்நரகத்தில் வெகுகாலமாய் வெந்துவேதனைப் படுகின்ருேரை விலக்குவாரில்லைக் கேட்பாரில்லை கந்தங் கமழ்ந்திடுங் காத்திமான கருணைநபியுமா எமைமறந்தார் நிந்தனைப்படும் பாவிகளின் நிருவாகம்சொல்லும் நபிக்கிஎன்பார். (8)

பின்பு ஜிப்ரயீல் அல்லாயிடம் பிரித்து நரகரின் சேதிஎல்லாம் ஒன்றுந்தவராம லெடுத்துசொல்லி உண்மைநபிக்கோத மறந்திடு வார், நன்றுநாயகன் கேட்பானப்போ நபிக்கேன்சொல்லாமல் மறந்து விட்டீர், முன்போயென்னுட மஹ்பூபிடம் மொழியு மவரும்மத் ஹாலைஎன்பான். (9)

அந்த மொழிகேட்டு ஜிப்ரயிலும் அழகாம் பிர்தௌசில் புகுந்து பார்க்க, கந்தங். கமழ்நபீ * தாஜணிந்துங் கருணை யசுஹாபு மார்க

* தாஜ் என்பது, கிரீட மென் றறிக.

ளுடன், பந்தமுடனேதா மிருக்கயிலே பகர்வார் ஜிப்ராயீல் உம்மத்தோர்ஹால், இந்தச்செய்தியை நபிகேட்டதும்யா என்உம்மத்தீ உம்மத்தென்றே. (10)

தலையின் தாஜதை இறக்கிவிட்டு தனியோ னருஷின்கீழ் வந்தவர்கள் நிலையாகநின்று யாஅல்லாஎன் நேர்மைக்கண்மணி பேரர்ஷஹீத்; குலையுண்டகுறைக் கேட்கவில்லை குற்றத்தாலழு மெனதும்மத்தோர்; மலைப்பை யகற்றியே விடுவைத்திடு மன்னவாவென மன்றுடுவார். ()

அப்போஅல்லா(ஹ்)வின் உத்திரவாம் அதுபோல் அஹ்மதுநபியுல்லாவும், ஒப்பமாகவே அஸ்ஹாபுடன் உகந்துப்போயவாள் தமையழைத்து, மெப்பாய் கவுதரில் முழுக்காட்டியே மேன்மை சுவனத்தினுடுப்புடுத்தி, சப்பா யழைத்துபோய் சுவர்க்கத்திலே சல்லல்லா நபீ சேர்ப்பார்களே. (12)

இந்தவிதமாக உம்மத்தோர்க்கு இரண்டு லோகிலுங் கருணையுள்ள அந்தமொன்றில்லான் திருமஹ்பூப் அஹ்மத் நபிசெயல் சொல்லுணரார், எந்த விதம்நாளை மஹ்ஷரிலே இறசூல் நபிதமை சந்திக்குவார், சிந்தை மகிழ்வாக சந்தித்துயாம் ஜெயம்பெரும் வழிசெப்பக்கேளீர். (13)

தன்னையறிந்தோர்க்கு முதலாம்நுதன் தவறுதறிந்தீமான் கொள்வதாகும், நன்றுஈமானின் றலையானது நவிலுங்கையிபுக் கலிமாவாகும், அன்பீமான்றலைக் காத்தபேர்க்கு அவனிவாழ்வெல்லா மகன்றிட்டாலும், பன்னுமாகிரில் படைத்தோனிடம் பதியாம்பொற்பதிப் பெற்றுவாழ்வார். (14)

முடிவுநாளையில் மூமினீன்கள் முஜ்ரிம்கள்ஹாலைப் பார்க்கவென்றே; நெடியோன் றன்னிடம் விடையும்பெற்று நெருப்பாம் நரகத்திற்புகுந்துபார்க்க, கடினநரகமு மந்தநேரம் கவிலுமூமினோர் தம்மைநோக்கி, அடியர்தனில்மூமி னோர்களே அன்பாயும்ஈமான் ஒளியதாலே. (15)

எங்கள் நெருப்பதின் கொழுந்தானது இதமாய்க் குளிர்ந்ததென்றமைக்குமென்று, சங்கைத்திருநபீ மணிவாயினல் சாற்றினர்யிதைமூமின்களே; அங்கமுடனேதா னுற்றுணர்ந்து அன்பாஈமானைப் பாதுகாத்துப், பங்கப்புவிவிட்டுப் பயணமானுல் பாங்குதருமீமான் பண்புகேவீர். (16)

அல்லாதிருபுறு கானையோதல் அன்பீமானுக்கு கல்பதாகும்
வல்லானைநல்லா திக்றுசெய்தல் வலுப்பஈமானின் உடலதாகும்
சல்லாபமான இகுலாசது சங்கைஈமானின் றூஹதாகும்
எல்லாத் தஹாரத்தாந் துப்புரவு ஈமானுக்கது ஒளிவாகுமே. (17)

அறிவுளன்கிற இல்மானது ஆகும்நண்பனும் ஈமானுக்கு
பரிவுடன்வைக்கும் நோன்பானது பண்பீமானுக்கு சிம்மாசனம்
வரிசையுடன்தரும் ஸக்காத்தது வண்மைஈமானை வளர்ப்பதாகும்
பரிவாய் செய்சாலிஹ் அமலானது பாங்காமீமானின் பணராகுமே. ()

பொய்யும்போருமை சினமூன்றதும் புகழீமானதைக் கரிப்பதாகும் உய்யும்பகையதி ஈமானுக்கு உள்ளும்புரம்வேரா யிருப்பதாகும் மெய் யீமான்வேரை வெட்டும்புழு மேன்மைப் பாருட்டும் பெருமையாகும்; அய்தமுடனிதை மூமினேர்கள் அறிந்துஈமானைப் பாதுகாப்பீர். (19)

ஆமாகுந்தீனில் றுகுனுநான்கு அன்பாயுண்டதை யருளக்கேளீர் ஈமானிசுலாமும் தெளஹீதுடன் எற்றமஅரிபத் தென்றறியும் ஆமாமிசுலாத்தி னுதித்தவாண்பெண் ஆய்ந்து அறிந்தவா ளகத்திலூன்றி, சீமான்தனமாக ஈமானுடன் செல்கநாடுவோ ருற்றுணர்வீர். (20)

ஈமானையொரு உருவமாக்கி எற்றஉருவத்தில் வின்னமுற்றால் ஆமாய்படுந்துய் பாயாசம்போல் அதிநோட்டஞ்செய்து சிகிச்சை செய்து, நாமாய்சுகமுா நாடும்போல நல்ஈமான்பேணி ஷறஐபேணி சீமான்றனமாக ஆகிரத்தில் ஜெயம்பொவழி செப்பக்கேளீர். (21)

நமதுதீனிலே ரண்டாம் றுகுன் நலத்தஇஸ்லாமேன் றறிந்துகொள்ளும், தமதுசோல்சோத்து சேயல்மூன்றதால் தகுமாய்வழிபடல்தானிசுலாம், எமதுநபீஷரீ அத்தரீகத் எற்றஹகீகத்து மஅரிபத்து, அமதியுடனுன்கு மிசுலாமதே அதிலேமுதல்ஷரீ அத்துத்தானே. (22)

——— :o: ———

ஷரீஅத்தின் மகிமை.

——

ஷரீஅத்தென்பது நம்மிரசூல் சருகாதுரைத்திட்ட சோல்லதாகும்
தரீகத்தென்பது தாஹாநபீ தகுமாய்நடந்திட்ட சேயலதாகும்
அறியும்ஷகீகத்து என்பதுதான் அஹ்மதுநபீ ஹாலேயாகும்
வரிசைமஅரிபா வென்பதுதான் வல்லோனபீதங்கள் சிற்றாகுமே. (1)

நன்றுநபிசொல்லே எடுத்தவர்தான் நலமா யவர்செயல் தனேஎடுப்பார், அன்பாயவர்செயல் தனேஎடுத்தோர் அழகா மவர்களின் ஹாலேக்காண்பார், பன்னுமவருட ஹாலேக்கண்டோர் பாங்கானயவர் சிற்ரைக்காண்பார், வென்றியவர்சொல்லே எடுக்காதவர் வேந்தர்நபி சிற்ரைக் காண்பதுண்டோ. (2)

நல்லார்நபியுல்லா சொல்செயல்கள் நலமாஎடுத்திடா தல்லத்தட்டி சல்லாபம்பேசித் திரிபவனே சாற்றலாமுன்கர் முர்த்ததென்றும் வல்லோன் லஅனத்திற்கருகனென்றும் வரிசைஈடேற்ற மற்றோனென்றும், சொல்லத் தகுமென பகிரங்கமாய் சொன்னூர்ஷறஉட உலமாக்களே. (3)

இசுலாத்திற்கடி தளமாகிய ஏற்ற பாலேந்தை இருத்திடாதான் அசுமானதியே ஆகம்பேசி ஆகாயந்தனில் பறந்திட்டாலும், விசுவாசங்கெட்ட வேங்கையாகி விரைவாய் மனுவுருவா கிட்டாலும், துசுமனிபுலீசன் துணேவனென்றே தூய்யமூமின்கள் தூரமிர்ப்பீர். (4)

கடல்போல் காணுங்காள் ஷரீஅத்தது சடலிற்குளிகாரன் போல் தரீகத், அடவுடன்சிப்பி யாம்ஹகீகத் தந்தசிப்பினுட் பொதிந்திருக்

கும், திடமாமுத்தது மஅரிபத்து திவ்யமுத்துக்கு முதற்காரணம், கடல்தா னென்பதைக் கவனித்திடார் கனத்தமணிமுத்தைக் கருதலேனே. (5)

மனிதர்தொலிபோல யாம்ஷரீஅத் மருங்கானதசை யாம்தரீகத் இனியாகுமெலும் பாம்ஹகீகத் எற்றமூளையா மஅரிபத்து தொனிக்கு மூளையா மஅரிபத்தைத் துலக்கக் காரணந் தொலிதா னென்று, இனிதாயுணர்ந்திடார் மூளைப்பற்ற எற்றமனத்தாசை வைப்பதேதனோ. (6)

கடல் குளிசிப்பி முத்துநான்கில் கன்னியம்மது முத்ததாகும் ஜடலந்தனிலுள்ளத் தொலிஎலும்பு சார்ந்த தசைமூளை இந்த நான்கில், அடவுடன்மூளை மேன்மைப்போல ஆகும்சங்கையா மஅரி பத்தின், திடனும்பாதைக்கி ஷரீஅத்தது திவ்யமுதற்பாதை யறிந் துணர்வீர். (7)

ஷரீஅத்தென்பது பாலைப்போலும் சார்ந்ததரீகத்து தயிரைப்போ லும், உரியஹகீகத்து வேண்ணைப்போலும் உயர்ந்தமஅரிபா நெய் போலுமாம், பரிவுடன்பாலைப் பாதுகாத்தால் பாங்காந் தயிர் வெண்ணை நெய்யாக்கலாம், சரியாயோசித்து ஷரஜப்பேணி சங் கைமஅரிபத் தறிந்துணர்வீர். (8)

சொல்லால் செயலதால் சொத்ததினுல் சூட்சியம்பெறும் ஷறஜ விட்டு, நல்லாமஅரிபா வழிகண்டதாய் நாட்டுமுதற்பாதை நழுக விட்டு, வல்லான்வணக்கங்கள் பலதும்விட்டு வாதுரைப்பேசிதானுங் கெட்டு, நல்லார்முஸ்லிமைக் கெடுக்கும்பேர்கள் நாயன்லகுனத்துக் காளாகுவார். (9)

அல்லாதனக்காக பயந்தஞ்சியும் அஹ்மத்நபிசெயல் சொல்பேணி யும், நல்லாஅமல்களை செய்துகந்தும் நலத்தஷரஉக்கு மாற்றமே தும், இல்லா ஷைகுமார் கிடைத்தாராகில் எற்றபைஅத்து வாங்கல் நலம், அல்லாவிடில்நம்ம ஷரஜப் பற்ற ஆகுமேநஜாத் தறிந்துணர் வீர். (10)

ஷரஜ யுணராத வைசுகள்.

—o—

ஷறஜயுணராத ஜனங்களுக்கு ஷரஇன் சட்டத்தைக் கற்பிக்காமல்
உரத்த மஅரிபத் தறியாசிலர் உகப்பாய் வந்தபீர் நானேஎன்று
சரசம்பேசியே பாலையூட்டி ஷரஉக்கிடருன பைஅத் தீந்து
மரமம் பேசியே பணம்பரிக்கும் மாந்தர் வலைசிக்கி மயங்கிடாதீர். ()

சங்கைநபியுல்லா உம்மத்திலே சருகா தமல்செய்யக் கஷ்டமென்று பங்கம் பேசிடும் சோம்பேறிகள் பரிவாய் மிகுத்தஇப் பிற்காலத் தில், அங்க முளஅமல் லேசைக்காட்ட அறியா மூடரை வழி கெடுக்க, சங்கை ஷறஇனை யுணராவைசு சண்டா ளர்தலை எடுத் தார்களே. (2)

அவர்கள் பலவித ஆடைபூண்டு அங்கம் வளர்க்குமோர் நாட்டங் கொண்டு, எவரும் மயங்கியே வலையிற்சிக்க எற்றக் கோலங்கள் பல தும்பூண்டு, தவரா தாரிப் ஆமிலென்றும் தக்க மஷாயிகு நானே என்றும், பவரும் பெருமையா யெங்கும்சிலப் பாதகர்வெளிப் பட் டார்களே. (3)

எங்குந் திரிந்தவாள் மூடருக்கு இதுநேர் வழிஎன்று பைஅத்தீந்து சங்கை ஷரகவாள் சருகவிட்டு வைத்தான் லகுனத்தின் வலையிற் பட்டு, பங்கம்பேசியே பலப்பிரிவாய் பாரில் கலகங்கள் பரவச் செய்து, தங்கள்நாடலைப் பற்றவைசு தரணி தனில்முரீத் கொடுத் தார்களே. (4)

அந்தவைசுகிடம் வாங்குமுரீத் அன்னநடைகற்கக் காகமது சொந்த தன்னடை தனைமறந்து சோர்வாய் தவ்வியே நடக்கல் போலும், பந்தமாய்ஊமைக் கினவுகண்டும் பகரமுடியாத பரிசு போலும், வந்தவைசுகினல் முடிவிலவாள் வரிசைதீன்விட்டுங் கெட் டார்களே. (5)

இப்போல் கொத்தாவர் மாய்கைவிட்டு மிசுலாத்தோர்கள்எம் யாபே ரையும், தப்பாதுஹக்கன் பாதுகாத்து தாஹா நபிசெயல் சொல்பேணி

யும், எப்போதும் அல்லா வணக்கத்திலே ஏற்றநம்பிக்கை வைத்தெல்லோரும், மெப்பாய் நடக்கவே நாடிஇப்லீஸ் மிகைப்பாங் கருத்ததை வகுத் துரைப்பாம். (6)

இப்லீசின் நாட்டமும், குபாடமும்.

கண்ணி ராகம்.

ஆதம் அலைஹிதம்மால் ஆனேன் லஅனத்தி என்று
பாதக னிபுலீஸ்முன் பரிதாபப் பட்டுரைத்தான். (1)

எந்த விதத்திலும் ஆதமுட மக்களையான்
நிந்தனைக் காளாக்கல் நிட்சயஞ் செய்வே னென்றான். (2)

அல்லாவுக் குவப்பான அடியார்களைக் கெடுக்க
பொல்லான் முயற்சைப்பலப் பொருத்தமாய் கேட்டுணர்வீர். (3)

தோங்கல்.

முன்னால்நபிஆதம் சபியுல்லாமேல் மூண்டஹஸதுள்ள லஅனத்துல்லா, பன்னாள்யோசித்து பாடுபட்டு பதிசொர்க்கம்விட்டு ஆதமுடன். மின்னார் ஹவ்வாவும் வெளியாகிட மீளாத் துயரமாய் உலகிலவாள், என்னாளுமேங்கித் தியங்கச்செய்த இப்லீஸ் லஅனத்தின் இடரைக்கேளீர். (4)

ஆதம்பயிர்செய்யுந் தலத்துக்கேக ஹவ்வா ரலியிடம் பெரியோனைப்போல், சூதனிபுலீசோர் *மதலைத்தந்து சொன்னான் நான்போயி வருமளவும், காத லுடன்காரு மென்றுரைத்துக் கசடன் சென்றபின் ஆதம்நபீ, வீத முடன்வந்திவ் வழகில்மிகு விருப்பப் பிள்ளைஏதென்றுகேட்டார். (5)

அப்போதுஹவ்வா இந்தப்பிள்ளை அமானிதமொத்தர் வைத்தாரென்க, ஒப்பமாயப்போ ஆதம்நபீ யோசித்தெவர்விட்ட தாகு

*மதலை என்பது, பிள்ளை என்றறிக.

83

மென்றுந், தப்பாது நம்மை சுவனம்விட்டுத் தரையில் வரச்செய்த இப்லீசுதான், மெப்பாய்விட்டதாய் தீர்மானித்து மிக்கக்கோபமா யப்பிள்ளையை. (6)

கண்டங்கண்டமாய் துண்டாடியே கண்டவிடங்களி லெடுத்தெறிந்தே பண்டைவேலைக்கி ஆதம்போகப் பாதகன்வந்துப் பிள்ளைக்கேட்கத் துண்டாடிஆதம் எறிந்தசேதி தோகை யாம்ஹவ்வா றலியுரைக்க விண்டான் அல்கன்னாஸ் எனகைக்கொட்ட வெருசா யப்பிள்ளை வந்ததுவே. (7)

அந்தப் பிள்ளையை முன்போலவே ஹவ்வா யிடம்விட்டு மவனேகி னன், வந்தாதம்கண்டு சேதிகேட்டு வகிர்ந்து துண்டாடி மரங்களிலே பிந்தாதுதொங்கக் காயப்போட்டார் பின்வந்தவன்கேட்க சேதி சொல்ல, நொந்தா னல்கன்ன ஸேனகைக்கொட்ட நொடியிலப்பிள்ளை வந்ததுவே. (8)

பின்னு முன்போல யவன்விட்டேகப் பெண்டீர் தமையாதம் கேட்க சொல்ல, நன்றாதங்கேட்டு நருக்கித் துண்டாய் நாரில் சாம்பலாய் சுட்டெறிந்தார், அன்பா யிபுலீசு பின்னவர்வந்து ஹவ்வாயிடங் கேட்கசேதிசொல்ல, சொன்னன் அல்கன்னாஸ் எனக் கைகொட்ட சுருக்கா யப்பிள்ளை வந்ததுவே. (9)

நான்கா வதும்விட பீபிஹவ்வா நலமாய் தர்கித்துங் கேளா லஈன் தோன்று மதளையை விட்டுப்போக தூய்ய ஆதமும் வந்துபார்த்து என்ற மட்டிலும் யோசித்தவர் இனிவ லாவண்ணம் செய்வோ மென்று, பான்மை யாய்வெட்டிக் கரிசமைத்துப் பண்பாய் இருவரும் பசியாறினர். (10)

பிந்தி வந்தவன் கேட்கஹவ்வா பிள்ளை யைசமைத்துண் டோமென்க சிந்தை மகிழ்ந்தவ னிதற்காகத்தான் செய்த என்வேலை நிறப்ப மாச்சு, இந்த என்குண முங்களுக்கு மேற்ற உம்மக்கள் யாவருக்கும் விந்தை யுருப்பெல்லாம் பாய்ந்தவைகள் விரைந்தென் குணத்திலே இழுக்குமென்றான். (11)

இதனல்தெரிந்தது அன்பர்களே இன்சான் ஜடலத்தில் இப்லீசுட பிதனு குணம்பாய்ந்து இருப்பதாக பிசகாதெரிந்தது வாகையாலே இதமாயெவையிலும் லஅனத்துட இடர்செய்குணமது தோன்று மானல், நிதமாய் லாஹவ்லா உடனேஓதி நீலனிபுலீசை வெறுட்டு வீரே. (12)

வேறு.

அல்லா(ஹ்)இடத்திலே எஹ்யாநபீ அன்பாய் கேட்டனர் இப்லீசினை பொல்லா னவன்சூரத் துள்ளபடி பொருதி வாஅவ னெருவஸ்த் தையு, மெல்லா மரைக்காம லென்கேள்விக்கி இதமாய் பதில்சொல்ல வனுப்பகேட்க, வல்லா னதுபோல நபியிடத்தில் வம்ப னிபுலீசை யனுப்பிவைத்தான். (13)

அவனின் றலையிலே பரந்தராஞ்சி அடவாய் கூஜாக்க ளிடுப்பிற் கட்டி, நலமா யவன்காலில் மணிகள்கட்டி நபிமுன் வரபார்த்து உன் தலையில், பவரா யுளவராஞ் சேதுக்கென்க பகர்ந்தா னிபுலீசு ஆத மக்கள், அவர்கள் ஹல்கைய ராஞ்சிக்கொள்ளு மாயுதம்மிது வாகு மென்றான். (14)

பின்புகூஜாக்க ளேதுக்கென்க பிரியப் பதிதண்ணீர் கூஜாக்களில் அன்பா யிருப்பதாய் மவுத்தின்வேளை ஆதமக்கட்கு ஆசைக்காட்டி நன்று மவரீமான் பரிப்பதென்க நபிகேட்டார் மணியதுக்கென்க இன்பாமணியிதை யானசைத்தால் இராகம் பாடுவா ரவர்களென் றான். (15)

ஆதம் மக்களை வழிகெடுப்ப தாகுமெவ்வேளை யுனக்குவென்க போதமுடனுண்டு நீர்குடித்து பூரித் தவருள்ள வேளைஎன்றான் வீதமுட னென்னை என்றுவது வீணிற்பற்றிய துண்டோவென்க சூதனருளினு னேரிரவு சோற்றை யதிகம்தா முண்டபோது. (16)

உங்கள் வணக்கத்தை மிகக்கடிசாய் உரமா யாக்கியே வைத்தே னென்றான், பங்கன் சொல்கேட்டு யஹ்யாநபீ பகர்ந்தார் நானினி

எக்காலமுந், திங்கேன் மிகவென்க இபுலீசப்போ திடறு இனிஎன்றும் மனுகளுக்கு, சங்கை யாம்நசீ ஹத்துசெய்யேன் சருகா தறியுங்கா ளென்றுரைத்தான். (16)

வேறு.

முந்தினதக் பீர்தவரா லொருநாள் சித்தீக்ரலீசவிப்பாய், எந்தன் சேயொன்றுமிறந்துவிட்டால் எனக்கு தேர்ச்சைகள் பலருஞ் சொல்வார், இந்த நேரத்தின் முன்தக்பீர் தஹ்ரீம்தவறலா லெனக்கு நேர்ந்த, சிந்தைத் துயரத்தை யகற்றுவோர்கள் ஜெகத்திலில்லை என நொந்தழுதார். (17)

ஒருபோதுலயீன் சித்தீகிடம் உரைத்தா னெழும்புங்கள் சுபுஹானது அருமையுரைகேட்டு ஐலயீனே அன்பாயிச்செய லுனக்கேதென்க ஒருநேரத் தஹ் ரீம்தவரா லுமதுஅழுகையா லேழுபத்து, சருகாப் பலன்பெற்றீ ரதுபோல்பெரா சார்ந்தஎன்வேலைப் பார்த்தேனென்றான். (18)

வேறு.

கண்ணி ராகம்.

ஆயிரம் லஅனத்தை ஆபிதொத்தர் நாள்தோறும்
தாயமா இப்லீஸ்மேல் தவராது செய்துவந்தார். (19)

ஓரல் அவர்படுத்து உறங்கும் சமையத்திலே
தீரமாய் வந்திபுலீஸ் தட்டிஎழுப்பிச் சொல்வான். (20)

எழும்பிடும் சீக்கிரமாய் இந்தசுவர்க் கவிழுமென்று
அழுத்தச் சொல்லைக்கேட்ட ஆபித்வெளி ஏகிநிற்க. (21)

உடனே சுவர்க்கவிழ உகப்பா எழுப்பினவர்
அடவுட னெவரென்று அன்பாகப் பார்க்கயிலே. (22)

இப்லீசு நிர்க்கக்கண்டு என்போன்ற மானிடரை
ஒப்பாய்த் தப்பச்செயல் உனக்குத் தகாதேஎன்றார். (23)

சொன்னானைய் ஆபிதே சுவர்க்கவிழ்ந்து நீஇறந்தால்
அன்பாம் ஷஹீதுபல னடைவீர்க ளாகையினால். (24)

அந்த ஷஹீதுபலன் அன்பாக தங்கள்பற்று
தெந்தன் அலுவலதை இயல்பாகப் பார்த்தேனென்றான். (25)

வேறு.

பெரியோ ரொருவர்காட்டில் பிரியமாய் நடக்கும்போது
அறியவே கண்டகாட்சி யன்பா யருளலுற்றார். (26)

இப்லீசைக் காட்டிற்கண்டு எதுக்கிங்கே திரிவதென்க
செப்புமென் வேலைபார்க்கும் சிஷ்யர்க ளுண்டுமென்றும். (27)

முற்காலங் கஷ்டப்பட்டேன் மூண்டத்துயர் யானெடுத்தேன்
பிற்காலி லென் கம்பெனி கர்க்காய் நடக்குதென்றும். (28)

எங்குயா னிருந்தாலு மெனக்குக் கவலையில்லை
உங்கட்கு இக்கவலை யொருபோதும் வேண்டாமென்றான். (29)

வேறு.

வலைகள் பலதைகையில் வம்பன்லயீன் சுற்றிப்போக
மலைமேல் வணங்கும் ஆபித் மாபாவி தன்னைக்கேட்டார். (30)

என்னடா இபுலீசே இருப்பதுஉன் கையிலென்க
உன்போன்ற ஆபித்களை உறமாய்நான் பிடிப்பதென்றான். (31)

ஒருபோது மெனைபிடிக்க உன்னால் முடியா தென்க
வருவீ ராகில்இப்பவே வலையிற் பிடிப்பேனென்றான். (32)

பிடிபார்ப்போ மென்றிறங்கப் பிரித்து வலையைப்பார்த்து
அடியரே உமைப்பிடிக்க ஆகும்வலை இல்லைஎன்றான். (33)

தங்கள் பெரிய ஆபித் தயவுடன்போங்க ளென்க
சங்கைமலை ஏறியவர் சாற்றினர் இபுலீசே. (34)

என்போல ஆபிதிட மேகவேண்டா மென்றுரைக்க
உன்போல ஆபிரரை உடனே பிடிப்பேனென்றான். (35)

வாவென்று யானழைக்க வந்துவிட்டீ ரென்னிடத்தில்
போவென்கப் போயிவிட்டீர் பொருந்தியதைப் பாருமென்றான். (36)

வேறு.

வீட்டின் கதவையெல்லா மூடிமஆ வியாரலீ
தேட்டமாய் தூங்கும்அப்போ தீங்கன்சதியைக்கேளீர். (37)

மஆவியா ரலியிடத்தில் மருங்காம் பெரியவர்போல்
பாவீ லஅனத்துவந்து பஜர்தொழுக எழும்புமென்றான். (38)

அப்போது கண்விழித்து அவர்பார்க்க யாருமில்லா
ஒப்பநம் கவனமென்று உகப்பாய் துகில்புறிந்தார். (39)

பின்னும் லஅனத்துவந்துப் பிரியமாய்க் கதவைத்தட்டி
இன்பாய் பஜர்தொழுக எழும்பும் ஜடுதிஎன்றான். (40)

எழுப்பினோர் எவரென்றே இதமாகப் பார்க்கஅவர்
நழுவா எவருமில்லா நாட்டமென துயில்புறிந்தார். (41)

இதுபோல நால்விடுத்த மெழுப்பக்கேட்ட மஆவியாவும்
பதுமையாய் எவருங்காணுப் பரிசுணற யோசிக்கயில். (42)

கதவுக்கருகில் போட்ட கனபடுதா அருகிலொத்தன்
இதமாய் முறைத்துநிற்க எவர்தாங்க ளென்றுகேட்டார். (43)

பதிலைக் கொடுத்திடாதால் பகர்ந்தார் மஆவியாரலீ
நிதியாக உண்மைசொல்லும் நீங்கள்யா ரென்றுகேட்டார். (44)

அப்போது நானிபுலீஸ் அன்பாய் பஜர்தொழுக
தப்பாதெழுப்பவந்தேன் தங்கள்பள்ளிப் போங்களென்றான்.()

இப்லீசா யிருந்தாலென்ன இன்னு மெவ ரானுலென்ன
ஒப்பஉண்மை சொல்லென்று உறமாய்ப் பிடித்துக்கொண்டார். (46)

தங்களை பஜர்தொழுக தகுமாய் எழுப்பவந்தேன்
சங்கையாம் பள்ளி தேடி சருகாதுப் போங்களென்றான். (47)

உன்வேலை இதுவல்ல உண்மைநீ சொல்லுமுன்னே
உன்னைவிடமாட்டே னுன்கருத்தைச் சொல்லுமென்க. (48)

அப்போது அஜ்ஜிலா பிஸ்ஸலாத்தி கப்லல் பவுத்தி
ஒப்ப ஹதீசுணர்ந்து உம்மிடத்தில்வந்தே னென்றான். (49)

இதுகேட்டு இப்லீசே என்னிடத்தில் பொய்ப்புறட்டு
எதையும்நீ சொல்லாம லேற்றஉண்மை சொல்லுமென்றார். (50)

ஒருவேளைத் தொழுகைவிட்டால் உக்பாமூன் றென்னுப்ஹதீஸ்
கருமத்தைக் கவனித்துக் களிப்புடன் வந்தேனென்றான். (51)

அப்போ தொருமிதா லருளினார் லஅனத்தே
ஒப்பமாய் கள்ளனைத்தன் ஊரார்வீட்டிற் புகுந்தே (52)

மனம்போல சொத்துக்களை மாபாவிமூட்டைக்கட்டி
கனக்கவன் போககேட்க காவற்கார னேன்றுரைத்தால். (53)

அவன்சொல்லைக் கேட்டவர்கள் அதுசரி தானேஎன்று
எவர்தா னுரைப்பார்கள் இத்தகைச்சொல் லுன்னதென்றார். (54)

ஆகையா லிப்லீசே ஆகுமுண்மை சொல்லும்வரை
ஏக மாட்டாயென்று இருக்கிப் பிடிக்கச்சொல்வான். (55)

உங்களுக் கொருமிதா லுரைக்குவேன் மஆவியாவே
அங்க முடன்கேட்டென் ஆபாசம் பாருமென்றான். (56)

நார்ப்ப தாயிரமாண்டு நாயனுக்கு மாநிலத்தில்
ஓர்மை யாகத்தொழுதேன் ஓரிடமும் பாக்கியில்லா. (57)

அதுபோல நான்வானில் அல்லாவை மிகத்தொழுதேன்
இதுபோல தங்கள்தொழ என்கவன மானதென்றான். (58)

இந்தவித மக்கர்சக்கர் இயம்புமுன் புறட்டுறேட்டு
அந்தமாய் சொல்லாதடா அருளுநீ உண்மையென்றார். (59)

பார்த்தான் இபுலீசுப் பாதவித்தான் ஏக்கமுற்றான்
வார்த்தையுண்மை சொல்லாவிட்டால் வழிகாணே மென்றழுதான்.

உண்மைநான் சொல்வேன்ஓ மஆவியாவே கேட்டுகொள்ளும்
வண்மை பஜர்தொழுகும் வக்துபோனால் தங்களிப்போ. (61

அழுதிடு மழுகைக்கண்டு ஆண்டவனு முங்களுக்கு
எழுதச்செய்வா னிருநூறு றகஅத்துத் தொழுத பலன். (62)

இரண்டு ரகஅத்துக்கு இருநூருய் பெற்றுக்கொள்ளா
உறமாக நானெழுப்பல் உண்மைஎன் றுரைத்துசென்றான்.(63)

(வேறு) தோங்கல்.

ஆண்டு பனிரண்டாய் பத்தாதிலே ஹக்கன்குத்துபோலி இல்மோதியே, மீண்டுதவஞ்செய்ய வனம்போகயில் மிடியன்இபுலீசு பின்தொடர, ஈண்டுமிறைகேட்டான் லஅன்த்தேநீ இவரை தொடர்ந்தது எதுக்கென்க, தீண்டுந்தீங்கனும் பதிலுரைத்தான் திடனுயிவர்களை வெகுகாலமாய். (64)

கலைக்குநாடியு முடிந்திடாதால் கானகந்தனில் துடர்ந்தேனென்க வலைக்குள்ளவர் சிக்கமாட்டாரென்றே வல்லோனுரைத்திட வம்பன்லஈன், துலக்கமுடனெந்தன் நாட்டம்போல துய்யோனேதந்தால் முடியுமென்க, பெலத்தஉன்னுட்டம் யாதுவென்று பெரியோன்கேட்கவே படிலுரைப்பான். (65)

கடினபசிதாகம் சக்ரூத்துபோல் கஷ்டமவர்க்குநீ கொடுப்பாயாகில் அடியேன்கலைக்குவே னென்றபோது அப்போதுமுன்னல் முடியாதென்க, வடிவாய்கலைக்குவேன் வல்லவனே வண்மையுடன்கபூல் செய்வாயென்க, படியிலவர்மறுங் கதிகமாக்கப் பண்பாய் கபூல்செய்தேன் மல்வூனேன்ருன். (66)

அவர்கள்தாகத்தால் பசிகடுசால் ஆவலாய்தேட காடனைத்தும் தவனம் பசிதீர்க்க கிடைத்திடாதால் தாகம்பசியினுல் காதடைப்பால், நவமாய்நடந்திட சக்தியற்று நலிந்து மெலிந்தவர் துடிக்கையிலே, அவர்களுக்குமுன் அந்தரமாய் ஆகாயந்தனில் நின்றுங்கேளீர். (67)

பலவாசமுள்ள கனிவர்கங்கள் பட்டுடைமூடுந் தட்டமொன்றில் நலமாய் குளிர்ந்தநீர் நிறைந்தகூஜா நண்பொடுகிளாஸ் மூடியவர்முன், இலங்கிஇறங்கியக் கனிவாசமும் எற்றத் தண்ணீரின் குளிற்சைக்கண்டு, கலக்க மாந்தாகந் தவிர்க்க தண்ணீர் கனத்த ஆவலாய் குடிக்கநாடி. (68)

தண்ணீருங்கிளாஸ் கூஜாபார்க்க தங்கத்தாலது இருக்கக்கண்டு பண்பாகஇந்தப் பாத்திரத்தில் பருகுவது ஹறூமென்றிருக்க நண்பொடுஎவ்வார் குடிப்பதென்று நவமாயவர்நாட லஅனத்துல்லா

அண்டமாம்ஆகா யத்திருந்து அடவாயொரு சப்தங் கொடுத்ததைக் கேள். (69)

எனக்கு உகப்பான என்தோழரே ஏற்றஎன்மீரு முறையத்தீனே
மனதுக் குவப்பான என்தோழரே மணமாயுமக்காக இத்தறுணம்
இனமாந்தங்கக் கூஜாகிலாசை இதமாகஹலா லாக்கிவிட்டோம், தனது
மனம்போல குடித்துண்ணுங்கள் தணியும்பசிதாக மெனவந்ததே. ( )

அந்தசப்தத்தை கேட்டதுப் ஆச்சர்யமாக ஆலோசிப்பார், நிந்தனை ஹறு மைஹலாலாய் கெடியேயொருபோதும் செய்யானென்று, வினைதைச்செயலிது லஅனத்துல்லா வீணன்செய்வேலைஎன்றுஎண்ணி அந்தத் தண்ணீரை குடிக்காமலே அறிந்தே னுன்வேலைமல்லு னென்றார். (71)

அப்போ குத்துபுமுன் இப்லீசவன் அதபாய் கைக்கட்டி வந்துநின்று ஒப்பமுளஅவன் நாட்டம்சொல்லி உங்களைஎன்றால் கலைக்கலாகா, தப்பாமல்மிக அவ்லியாக்கள் ஆரிபீன்சாலி ஹீன்முமீனை, மெய்பாய்க் கெடுத்தப்போ லுமைகெடுக்க மிறட்டவழிகாணே னென்றுசென் றான். (72)

தன்பீஃ.

இத்தகையான குணத்துடைய இப்லீஸ் லஅனத்தின்நாட்டங்களை கத்தன்நபியுல்லா உம்மத்தாண்பெண் கருதிஇப்லீசின் வலையில் சிக்கா, நற்றவநபிஷரஜப்பேணி நாளைமஹ்ஷரில் ஜெயமடைய
உற்றமுஅஜிஸா உமர்நீதங்கள் உரைத்திடு மூன்றும்பாகம் பாரீர்.

அல்லாஹுஉந்தன் கிருபையினால் அஹ்மத்நபியும்மத் தாண்பெண் ணுக்கு; நல்லாதௌபிகை நீகொடுத்து நாயகர்நபீ உகப்பைக்கண்டு, எல்லாமவர்கள்மேல் பிரியம்வைத்து ஏற்றஅமல்களை யுகந்துசெய்து சல்லாபமாக இருலோகிலும் சங்கைக்கொடுத்தருள் ஆமீனமீன். (74)

பிரஹ்மதிக யாஅர்ஹமர் ருஹிமீன் வல்ஹம்து லில்லாஹி
றப்பில் ஆலமீன்.

தவ்லதே தாரைன் (என்னும்) இருலோக சம்பத்து
இரண்டாம் பாகம்
திருநபி யுகப்பும், தீனோர்கள் மதிப்பும். முற்றுப்பெற்றது.